006437

AL/2021(2022)/25B/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

| | | |
|---|---|---|
| යුරෝපා ඉතිහාසය | II | (I කොටස) |
| ஐரோப்பிய வரலாறு | II | (பகுதி I) |
| History of Europe | II | (Part I) |

**25 B** **T** **II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

ஐரோப்பிய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. **1989** வரை

சுட்டெண் : ..............................

**அறிவுறுத்தல்கள் :**

※ இப்பகுதி **40** வினாக்களைக் கொண்டுள்ளது. எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

※ ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள **ஐந்து** தெரிவுகளில் **ஒன்று** மட்டுமே சரியானது. அச்சரியான விடையைத் தெரிவுசெய்து தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கேற்ப உமது விடையைக் குறித்துக் காட்டுக.**

※ பகுதி **I** இற்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.

※ **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி **I** இற்கான விடைத்தாள்களை பகுதி **II** இற்கான விடைத்தாள்களுடன் **இணைத்துக் கையளிக்குக.**

## பகுதி I

● **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் **பொருந்தாது** உள்ளது. அந்தப் **பொருந்தாத** பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**1.** (1) தேம்ஸ் (2) எல்ப் (3) டான்சிக் (4) விஸ்ரியூலா (5) போ (......)

**2.** (1) தீப்ஸ் (2) மெகாரா (3) டெல்பி (4) ஆர்கோஸ் (5) பொம்பெய் (......)

**3.** (1) அக்ரோபொலிஸ் (2) பொலொக்ஞா (3) பாரிஸ் (4) ஒக்ஸ்போட் (5) பாதுவா (......)

**4.** (1) ஈஸ்கிலிஸ் (2) செபோக்லிஸ் (3) யூரிபிடிஸ் (4) தஸிடஸ் (5) அரிஸ்டோபெனிஸ் (......)

**5.** (1) மினோவன் (2) ஒஸ்ட்ரோகோத் (3) ஆங்கிலோ-சக்சன் (4) லொம்பாட்ஸ் (5) பிராங்க்ஸ் (......)

**6.** (1) நிக்கலஸ் கொபர்ணிகஸ் (2) பிரான்சிஸ்கோ பிசாரோ (3) கலிலியோ கலிலி (4) ஜொஹன்னஸ் கெப்லர் (5) ஐசக் நியூட்டன் (......)

**7.** (1) பொஹிமியன் காலம் (2) டெனிஷ் காலம் (3) ஜெர்மன் காலம் (4) சுவீடிஸ் காலம் (5) பிரான்சிய காலம் (......)

[பக். 2 ஐப் பார்க்க

8. (1) மகா பிரடெரிக் (2) லூயி பிலிப் (3) மகா கதரீன்
(4) மரியா தெரேஸா (5) இரண்டாம் ஜோசப் (......)

9. (1) கோர்சிகா (2) சிசிலி (3) எல்பா
(4) புனித ஹெலெனா (5) குரோஷியா (......)

10. (1) லொயிட் ஜோர்ஜ் (2) ஜோர்ஜ் கிளமென்சோ (3) விக்ரோறியா ஓர்லன்ட்டோ
(4) ஜோசப் ஸ்ராலின் (5) வூட்ரோ வில்சன் (......)

- **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

11. (1) சியுஸ் - ஒலிம்பியா
(2) அதீனா - அதென்ஸ்
(3) ஜுபிடர் - ஸ்பார்டா
(4) அப்பலோ - டெல்பி
(5) அவ்ரோடயிட் - கொரிந்த் (......)

12. (1) கிளிஸ்தீனிஸ் - அதீனிய ஜனநாயகத்தின் தந்தை
(2) ஹிபோகிரடிஸ் - மருத்துவத் துறையின் தந்தை
(3) ஹெறொடோடஸ் - வரலாற்றின் தந்தை
(4) பெட்ராக் - மானிடவாதத்தின் தந்தை
(5) லூயி பிளாங்க் - விஞ்ஞான சமூகவுடைமையின் தந்தை (......)

13. (1) பைசாந்தியப் பேரரசு - கொன்ஸ்தாந்திநோபிள்
(2) ஒட்டோமன் பேரரசு - ஜெருசலேம்
(3) ஆஸ்திரியப் பேரரசு - வியன்னா
(4) பிரான்சுப் பேரரசு - பரிஸ்
(5) ஜெர்மன் பேரரசு - பேர்ளின் (......)

14. (1) நூற்றாண்டுப் போர் - இங்கிலாந்து ஒரு பங்குதாரர்
(2) முப்பதாண்டுப் போர் - இங்கிலாந்து ஒரு பங்குதாரர்
(3) ஏழாண்டுப் போர் - இங்கிலாந்து ஒரு பங்குதாரர்
(4) கிரீமியன் போர் - இங்கிலாந்து ஒரு பங்குதாரர்
(5) முதலாம் உலகப்போர் - இங்கிலாந்து ஒரு பங்குதாரர் (......)

15. (1) தொமஸ் ஹொப்ஸ் - லெவியதான் (Leviathan)
(2) ஜோன் லொக் - அரசாங்கம் பற்றிய இரண்டு கட்டுரைகள் (Two treatises of Government)
(3) ஜீன் ஜக் ரூசோ - சட்டத்தின் ஆன்மா (Spirit of law)
(4) அடம் ஸ்மித் - தேசங்களின் செல்வம் (Wealth of nations)
(5) வி. ஐ. லெனின் - அரசும் புரட்சியும் (State and Revolution) (......)

- **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / திகதிகள் / கூற்றுகளின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள்/ திகதிகள் / கூற்றுகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் தரப்படவில்லை. **Y**நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

16.

| X | | Y |
|---|---|---|
| (i) | ஜுலியஸ் சீசர் | A இக்காலத்தின் முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது பேச்சுவார்த்தைகளாலோ பெரும்பாலானோரின் தீர்மானங்களினாலோ அல்லாது இரத்தத்தினாலும் இரும்பினாலுமே ஆகும். |
| (ii) | பதினான்காம் லூயி | B நானே புரட்சி |
| (iii) | நெப்போலியன் போனபார்ட் | C பால்டிக் கடலிலிருந்து அட்ரியாட்டிக் கடல் வரை (ஐரோப்பா) கண்டத்தின் குறுக்கே இரும்புத் திரை ஒன்று இறங்கியுள்ளது. |
| (iv) | ஒட்டோ வொன் பிஸ்மார்க் | D நான் வந்தேன், நான் பார்த்தேன், நான் கைப்பற்றினேன். |
| (v) | வின்ஸ்ரன் சேர்ச்சில் | E நானே அரசு |

(1) ABECD (2) AEDCB (3) BAECD (4) DEABC (5) DEBAC (......)

17.

| X | | Y |
|---|---|---|
| (i) | இருண்ட கண்டம் | A பிரித்தானியா |
| (ii) | புதிய உலகம் | B ஆபிரிக்கா |
| (iii) | கடைக்காரர்களின் தேசம் | C இத்தாலி |
| (iv) | புவியியல் வெளிப்படுத்தல் மட்டும் | D துருக்கி |
| (v) | ஐரோப்பாவின் நோயாளி | E அமெரிக்கா |

(1) ABDEC (2) BADEC (3) BAECD (4) BEACD (5) CDAEB (......)

18.

| X | | Y |
|---|---|---|
| (i) | பஸ்ரீல் தாக்குதல் | A ஐக்கிய அமெரிக்க அரசுகள் இரண்டாம் உலகப்போரில் நுழைதல் |
| (ii) | ஸ்பானியப் பிளவை நோய் | B இரண்டாம் உலகப்போரின் முடிவு |
| (iii) | இளவரசர் பிரான்சிஸ் பேர்டினனின் கொலை | C நெப்போலியன் போனபார்டின் வீழ்ச்சி |
| (iv) | பேர்ள் துறைமுகத்தை ஜப்பானியர் தாக்குதல் | D பிரான்சியப் புரட்சி ஆரம்பம் |
| (v) | ஹிரோஷிமா, நாகசாகியில் அணுகுண்டு வீசுதல் | E முதலாம் உலகப்போர் ஆரம்பம் |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EACDB (5) ECADB (......)

19.

| X | | Y |
|---|---|---|
| (i) | வி. ஐ. லெனின் | A செஞ்சட்டை இராணுவம் |
| (ii) | லியோன் ட்ரொஸ்கி | B மேற்குலகுடன் அமைதியான சகவாழ்வு |
| (iii) | ஜோசப் ஸ்ராலின் | C கிளஸ்நொஸ்ட் (திறந்த தன்மை) பெரஸ்ரோறிகா (பொருளாதார மறுசீரமைப்பு) |
| (iv) | நிகிட்டா குருச்சேவ் | D ஐந்து ஆண்டுத் திட்டங்கள் |
| (v) | மிக்கேல் கொர்பசேவ் | E புதிய பொருளாதாரக் கொள்கை |

(1) ACEBD (2) AEDBC (3) DEACB (4) EADBC (5) EDACB (......)

20.

| X | | Y |
|---|---|---|
| (i) | ட்ரிக்வி லீ | A பர்மா |
| (ii) | டக் ஹமர்ஷீல்ட் | B நோர்வே |
| (iii) | ஊ தாண்ட் | C ஆஸ்திரியா |
| (iv) | குட் வால்ட்டெய்ஹிம் | D பேரு |
| (v) | ஜேவியர் பெரஸ் டி குவேலார் | E சுவீடன் |

(1) BEACD (2) CABED (3) CEABD (4) DECBA (5) EDABC (......)

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** உரிய தலைப்பிற்குப் **பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**21.** **கிரேக்க நகர அரசுகள்**

(1) கிரேக்க நகர அரசு 'போலிஸ்' என்று அழைக்கப்பட்டது.
(2) கிரேக்க நகர அரசுகள் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் தோன்றின.
(3) கிரேக்க அரசுகள் பரப்பளவு, சனத்தொகை ஆகிய இரண்டிலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு இருந்தன.
(4) பெரிக்கிளிஸின் காலத்தில் அதினிய ஜனநாயகம் முழுமையான பூரணத்துவம் அடைந்தது.
(5) பெலபொனீசியன் போர் கிரேக்கர்களுக்கும் பாரசீகர்களுக்கும் இடையில் உருவானது. (……)

**22.** **கிறிஸ்தவ சமயம்**

(1) கிறிஸ்தவ சமயம் ஒரு தெய்வக் கோட்பாட்டு சமயமாகும்.
(2) கி.மு. மூன்றாம் நூற்றாண்டு வரை உரோம ஆட்சியாளர்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினர்.
(3) கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் கிறிஸ்தவ சமயம் உரோமப் பேரரசு முழுவதும் பரவியிருந்தது.
(4) டேசியஸ் என்ற உரோமப் பேரரசன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதை முடிவுக்குக் கொண்டு வந்தான்.
(5) தியடோசியஸ் கிறிஸ்தவ சமயத்தை உரோமப் பேரரசின் அரச சமயம் ஆக்கினான். (……)

**23.** **மானிய முறை**

(1) மத்திய கால ஐரோப்பாவின் அரசியல், பொருளாதார முறை மானிய முறை எனக் குறிப்பிடப்பட்டது.
(2) மானிய முறை பிராங்க் இராச்சியத்தில் ஆரம்பமாகி ஐரோப்பாவின் ஏனைய பிரதேசங்களுக்குப் பரவியது.
(3) மானிய முறையின் கீழ் மத்தியதர வகுப்பினர் அரசிடமிருந்து காணிகளைப் பெற்று அரசனுக்குப் படைவீரர்களை வழங்கினர்.
(4) மானிய முறையானது பண்ணை முறை மீது கட்டியெழுப்பப்பட்டது.
(5) மானிய முறையின் கீழ் அரசியல் அதிகாரம் பரவலாக்கப்பட்டதாக இருந்தது. (……)

**24.** **சமயச் சீர்திருத்தம்**

(1) சமயச் சீர்திருத்தம் ஜேர்மனியில் ஆரம்பமானது.
(2) சமயச் சீர்திருத்தம் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு வழியேற்படுத்தியது.
(3) கத்தோலிக்க திருச்சபையில் இருந்த ஊழல்கள், சமயச் சீர்திருத்தம் ஏற்படுவதற்கு பிரதான காரணமாகும்.
(4) சமயச் சீர்திருத்தத்தின் தாபகராக மார்ட்டின் லூதர் கருதப்படுகின்றார்.
(5) 1517 இல் தொண்ணூற்றி ஐந்து விடயங்கள் அடங்கிய ஆவணத்தை விட்டன்பேர்க் தேவாலயக் கதவில் பொருத்துதல், சமயச் சீர்திருத்தத்தின் ஆரம்பத்தை அடையாளப்படுத்தியது. (……)

**25.** **முதலாம் உலகப்போர்**

(1) முதலாம் உலகப் போர் 1914 இல் ஆரம்பமானது.
(2) ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா என்பன மத்திய வல்லரசுகள் எனப்பட்டன.
(3) ரஷ்யா, பிரான்ஸ், பிரித்தானியா, இத்தாலி ஐக்கிய அமெரிக்க அரசுகள் என்பன நேச நாடுகள் எனப்பட்டன.
(4) வேர்சேல்ஸ் உடன்படிக்கை ஜெர்மனியுடன் கைச்சாத்திடப்பட்டது.
(5) புனித ஜெர்மயின் ஒப்பந்தம் துருக்கியுடன் கைச்சாத்திடப்பட்டது. (……)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் ………………………………… **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ………………………………… **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ………………………………… **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் ………………………………… **4** எனவும்
**வேறு** விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் ……… **5** எனவும்
**அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | **வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**26.** 15 ஆம் 16 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட நாடுகாண் பயணங்கள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) நாடுகாண் கடற் பயணங்கள் ஆரம்பத்தில் போர்த்துக்கேயராலும் ஸ்பானியர்களாலும் மேற்கொள்ளப்பட்டன.
(B) நாடுகாண் கடற் பயணங்களின் பிரதான நோக்கம் ஆசியாவை அணுகுவதற்குப் புதிய பாதையைக் கண்டுபிடித்தல் ஆகும்.
(C) பெர்டினன் மகலன் அமெரிக்க கண்டத்தைக் கண்டுபிடித்தான்.
(D) வோல்டர் ராலி உலகத்தைச் சுற்றிப் பயணம் செய்தார். (……)

**27.** 1688 - 89 மகோன்னதப் புரட்சி பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) இரண்டாம் ஜேம்ஸ் சிம்மாசனத்திலிருந்து நீக்கப்பட்டார்.
(B) மேரியும் ஒரேஞ்ச் வில்லியமும் இங்கிலாந்தின் இணைந்த ஆட்சியாளர்கள் ஆகினர்.
(C) மகோன்னதப் புரட்சி இங்கிலாந்தில் அரசியல் யாப்பிலான முடியாட்சிக்கு அடித்தளம் இட்டது.
(D) உரிமை மனுவானது சட்டத்துடன் இணைக்கப்பட்டது. (……)

**28.** ரிச்சலியூ தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
(A) பதினைந்தாம் லூயியின் முதல் மந்திரியாகப் பணியாற்றினார்.
(B) அரசனதும் மத்திய அரசாங்கத்தினதும் அதிகாரத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தார்.
(C) பிரபுக்களின் அதிகாரங்கள், சலுகைகள் என்பவற்றைத் தாக்கினார்.
(D) ஹியூகனொட்ஸ்க்களுக்கு ஆதரவு வழங்கினார். (……)

**29.** பழைய அதிகாரத்துவ ஆட்சிமுறை (Ancien Regime) பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
(A) பழைய அதிகாரத்துவ ஆட்சி முறையின் கீழ் பிரான்ஸிய சமூகம் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
(B) பழைய அதிகாரத்துவ ஆட்சி முறையின் கீழ் குடியாட்சி நிலவியது.
(C) மதகுருமார், பிரபு வகுப்பினர் ஆகிய இரு வகுப்பினரும் விசேட சலுகைகளை அனுபவித்தனர்.
(D) பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஈடன் உடன்படிக்கை பிரான்ஸின் பொருளாதாரத்தை மேலும் முன்னேற்றுவதற்கு உதவியது. (……)

**30.** பனிப்போர் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
(A) ஐக்கிய அமெரிக்க அரசுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் நிலவிய அரசியல் மற்றும் சித்தாந்தக் கோட்பாடுகளின் மோதலே 'பனிப்போர்' எனப்படுகின்றது.
(B) வட அத்லாந்திக் உடன்படிக்கை அமைப்பு 1949 இல் தாபிக்கப்பட்டது.
(C) 1955 இல் வார்சோ ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
(D) 1989 டிசெம்பர் மாதத்தில் அமெரிக்காவினதும் ரஷ்யாவினதும் தலைவர்கள், பனிப்போர் உத்தியோகபூர்வமாக முடிவுற்றதாகப் பிரகடனப்படுத்தினர். (……)

- **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**31.** மிலான் கட்டளையை பிரகடனப்படுத்திய உரோமப் பேரரசன் யார்?
(1) மார்க்கஸ் அவுரேலியஸ் (2) டயக்லீஷியன் (3) வலேரியன்
(4) கொன்ஸ்டன்ரைன் (5) தியடோசியஸ் (……)

**32.** ஏழாண்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த சமாதான உடன்படிக்கை எது?
(1) ஒக்ஸ்பேர்க் சமாதான உடன்படிக்கை
(2) பரிஸ் சமாதான உடன்படிக்கை
(3) ஏமியன் சமாதான உடன்படிக்கை
(4) போட்ஸ்மத் சமாதான உடன்படிக்கை
(5) உரோம சமாதான உடன்படிக்கை (……)

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,

**33.** பயன்பாட்டுவாதக் கோட்பாட்டை விரித்துரைத்தவர் யார்?
(1) தோமஸ் மால்தஸ் (2) டேவிட் ரிக்காடோ (3) ஜெரமி பெந்தம்
(4) றொபேட் ஓவன் (5) பிரடெரிக் எங்கிள்ஸ் (……)

**34.** ஏழு கிழமைப் போர் எந்த நாடுகளுக்கு இடையில் ஏற்பட்டது?
(1) பிரான்சு, இங்கிலாந்து (2) ரஷ்யா, துருக்கி (3) ஆஸ்திரியா, சர்டினீயா
(4) ஆஸ்திரியா, பிரஷ்யா (5) பிரான்சு, பிரஷ்யா (……)

**35.** அனைத்து மனிதர்களும் உயர்ந்த மட்டத்திலான சுகாதாரத்தை அடைவதற்கான இலக்குடன் அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் விசேட முகவராக இருப்பது எது?
(1) சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)
(2) உலக சுகாதாரத் தாபனம் (WHO)
(3) உணவு விவசாயத் தாபனம் (FAO)
(4) ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF)
(5) ஐக்கிய நாடுகளின் நிவாரணம் மற்றும் வேலை முகவர் (UNRWA) (……)

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு வகையான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும். **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் **முதலாவது** கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | புராதன கிரேக்கர்கள் பிரபஞ்சத்தில் மிக முக்கியம் வாய்ந்த பிராணியாக மனிதனை மேன்மைப்படுத்தினர். | கி. மு. 8 ஆம் நூற்றாண்டில் ஹோமர் லைசியம் என்ற பெயருடைய பாடசாலையை ஆரம்பித்தார் என்று நம்பப்படுகின்றது. | (………) |
| **37.** | அரசர்களின் தெய்வீக உரிமை என்பது அரசர்கள் கடவுளுக்கு மட்டுமே பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என்று பிரகடனப்படுத்திய கோட்பாடு ஆகும். | 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரான்சில் 14 ஆம் லூயியின் முடியாட்சி தெய்வீக உரிமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தது. | (………) |
| **38.** | தனது மக்களின் சமயமாக லூதர் சமயத்தையோ கத்தோலிக்க சமயத்தையோ தெரிவு செய்வதற்கு ஜெர்மன் இளவரசர் அனைவருக்கும் சுதந்திரம் உண்டு என்று நான்றிஸ் பிரகடனம் பிரகடனப்படுத்தியது. | 1806 இல் நெப்போலியன் போனபாட் புனித உரோமப் பேரரசை இல்லாதொழித்தான். | (………) |
| **39.** | புரட்சி ஆண்டு என அழைக்கப்பட்ட 1848 நவீன ஐரோப்பா வரலாற்றின் திருப்புமுனை எனக் கருதப்படுகின்றது. | 1848 ஆம் ஆண்டானது பிரான்சியப் புரட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட புரட்சியின் இறுதியாகக் குறிப்பிடப்படுவதுடன் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் வெற்றிகரமான தேசிய இயக்கங்களின் ஆரம்பமாகவும் குறிப்பிடப்படுகின்றது. | (………) |
| **40.** | இலண்டன் உடன்படிக்கை ஐரோப்பிய பொருளாதார சமூகத்தைத் தாபித்தது. | 1949 இல் சார்ள்ஸ் டி கோல் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் முதலாவது சான்சிலராக நியமிக்கப்பட்டார். | (………) |

* *

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

| | | |
|---|---|---|
| යුරෝපා ඉතිහාසය II<br>ஐரோப்பிய வரலாறு II<br>History of Europe II | 25 B | T |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..............................




Department of Examinations Sri Lanka